**டிசம்பர் - 8**

**"உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே, என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்."**

**- யோவா 15 : 18.**

நம்முடைய எஜமான் ஒரு காரணமுமின்றி பகைக்கப்பட்டது போல கூடுமானவரை நம்மிடமும் இருப்பதாக. நமக்கு எதிராக ஊற்றப்படும் பகைகள், துர்குணம், பொறாமை, கொலை முதலியவைகளுக்கு நாம் முற்றிலுமாக பாத்திரமற்றாவர்களாயிருப்போமாக. நம்முடைய ஜீவியம் கிட்டத்தட்ட சுத்தமாக இருப்பதாக. கூடுமானவரை நம்முடைய எண்ணங்களும், வார்த்தைகளும், கிரியைகளும் நம்முடைய கர்த்தருடைய புண்ணியங்களை அறிவிக்கவும், எல்லா மனிதருக்காகவும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்காகவும், நம்முடைய அன்பை சொல்லவும் கூடியவர்களாயிருப்போமாக. நாள் செல்ல செல்ல புது நேகமம் சரிவர ஏற்படுத்தப்படும் போது, எதிராளியினால் அதிகதிகமாகக் குருடாக்கப்பட்டும் ஏமாற்றப்பட்டுமிருக்கிற ஜனங்களும், இப்பொழுது நம்மை வெறுக்கிறவர்களும் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு முன்பாக பணிந்து கொள்ளுவார்கள். நாம் அவர்களை தூக்கி எடுத்து, ஆசீர்வதித்து, அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்களை மன்னித்து, தேவனுடைய முழுசாயலுக்கும் ரூபத்துக்கும் திரும்பிவர அவர்களுக்கு உதவி செய்வதில் நமக்கு மிகப்பெரிய சந்தோஷம் கிடைக்கும்.

**- Z ’01, 300 (R 2880).**

வேத வாக்கியங்களிலுள்ள "உலகம்" என்ற வார்த்தை பற்பல அர்த்தங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1.சிருஷ்டிக்கப்பட்டவை எல்லாம் 2.இவ்வுலகம் 3.ஒரே நேகமத்திலுள்ள காரியங்களின் ஒழுங்கு 4.அதோடு இணக்கமாயிருக்கிற ஜனங்கள் 5.முழு மனித இனம் தெளிவாக, முழு மனுக்குலமும் நம்முடைய கர்த்தரை வெறுக்கவில்லை. ஏனென்றால், அவரோடு சம்பந்தப்பட்ட சில புறஜாதியாரான ஜனங்கள் அவரை கனம் பண்ணினார்கள். மிகவும் உண்மையாக யூதமதத் தலைவர்களும், அவர்களால் நடத்தப்பட்டவர்களும் அவரைப் பகைத்தார்கள். அதற்கு காரணம், அவருடைய போதனைகள் அவர்களுடைய தப்பான உபதேசங்களை தப்பென்று காட்டின, அவருடைய மாதிரி அவர்களுடைய கபட நாடகத்தை இழிவுப்படுத்தியது. அவர்களுடைய குற்றாங்களை அவர் பகிரங்கப்படுத்தினது அவர்களுடைய கௌரவத்தைக் கெடுத்தது. அவர்களுடை சீர்த்திருத்தம் அவர்களுடைய ஆதிக்கம் புகழ் முதலியவற்றை பெறவுள்ள அதிக ஆசைகளை ஆபத்துக்குள்ளாக்கின. அவருடைய மதம் அவர்களுடைய மதப்பிரிவுகளை அழித்தது, அவருடைய செல்வாக்கு அவர்களுடைய அதிகாரத்தைக் குறைத்தது. இயேசு கிறிஸ்து பகைக்கப்பட்ட அதே காரணங்களுக்காக, அந்தகாரம் வெளிச்சத்தை வெறுக்கிறது போல, சுவிசேஷயுகத்திலுள்ள தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய பேர் ஜனங்களால் பகைக்கப்பட்டிருக்கிறார்கள் முடிவுவரை அவ்விதமாகவே இருக்கும்.

**- P ’32, 197.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 41:9; யோவா 1:19-25; ஏசா 53:1-3; மத் 10:16-39; 24:9; மாற் 13:13; லூக் 21:17; 19:14; யோவா 16:2,3; 17:14; 1யோவா 3:1,13.

**கோபுர வாசிப்பு :** Z ’11, 141 (R 4813).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் சத்தியத்துக்காக மற்றவர்களுடைய பகையை அனுபவித்தேனா? எப்படி? பலன்கள் எவை?